மோடி மீது அதிருப்தி ஏன்?



குர்சரண் தாஸ்
gurcharandas@gmail.com

அரசியல் என்பது குறுகிய காலத்துக்கான விளையாட்டு, பொருளாதாரம் என்பது நீண்ட காலத்துக்கான விளையாட்டு – இரண்டுமே எதிரெதிர் திசையில் இழுப்பவை. இந்தப் பொருந்தாத இணை காரணமாகவே பெரும்பாலானவர்கள் அதிருப்தியில் ஆழ்ந்துள்ளனர். மோடியின் செயல்பாடு நன்றாக இருந்தாலும் அவரை ஆதரித்தவர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திச் செய்யத் தவறிவிட்டார். சங்கப் பரிவாரங்கள் தங்களுடைய செயல்களால் அவருக்குத் தொடர்ந்து சிக்கலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

மோடியோ இப்போது துணிச்சலான சீர்திருத்தக்காரராக உருவெடுக்காமல் மிதவாதியாகவும், சாத்தியமானதை மட்டும் மேற்கொள்கிறவராகவும் மத்தியவாத சித்தாந்தத்தைக் கையாள்பவராகவும் மாறியிருக்கிறார்.

ஓராண்டைவிட பொருளாதாரம் முன்னேறியிருந்தாலும் அதன் திறனுக்கேற்ப வளரவில்லை. அடுத்த ஆண்டு சீனத்தைவிட அதிக வளர்ச்சி வேகம் இருக்கும். பணவீக்க விகிதம் 18 மாதங்களுக்கு முன்னிருந்ததைவிட பாதியாகக் குறைந்திருக்கிறது. ரூபாய் மாற்று மதிப்பு பெரும்பாலும் நிலையாகவே இருக்கிறது. அரசின் வரவு-செலவு பற்றாக்குறையும் வெளி வர்த்தகப் பற்றாக்குறையும் கட்டுக்குள் இருக்கின்றன.

1991-92-க்குப் பிறகு இந்த ஆண்டு தான் மூலதனத் திரட்டு அதிகம். காப்பீடு, பாதுகாப்புத் துறைகளில் அந்நிய முதலீட்டு வரம்பு உயர்த்தப்பட்டுள்ளன.

டீசல் விலை மீது அரசு கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிறது. நிலக்கரி உற்பத்தி கடந்த 23 ஆண்டுகளில் இல்லாத அளவாக 8.3% அதிகரித்ததால் மூடிக்கிடந்த பல அனல் மின்னுற்பத்தி நிலையங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கிவிட்டன. திட்டங்களுக்கு ஒப்புதல் தருவதில் இருந்த தேக்கநிலை நீங்கிவிட்டது. பொதுபட்ஜெட்டும் ரயில்வே பட்ஜெட்டும் முதலீட்டை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டன. ஜன் தன் திட்டம் பெரு வெற்றி. ஏழைகளுக்காகக் கொண்டுவந்த காப்பீடு திட்டங்களும் ஓய்வூதிய திட்டமும் குறைந்த செலவில் நிறைந்த பலன்களை வழங்குபவை.

கடந்த ஓராண்டில் மத்திய அரசு மீது ஊழல் புகார் ஏதுமில்லை. அலைக்கற்றை, நிலக்கரி சுரங்க ஏலம் மூலம் அரசுக்குக் கணிசமான வருவாய் கிடைப்பதுடன் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடந்து முடிந்தன.



விண்ணப்பங்கள், ஒப்புதல் அளிப்பது அனைத்தும் ஆன்லைன் மூலமாக நடைபெறுவதால் ஊழலுக்கான வாய்ப்புகள் குறைந்துள்ளன. உலக அரங்கில் இந்தியா மீதான மதிப்பு உயரத் தொடங்கியிருக்கிறது. நேபாளத்திலும் யேமனிலும் இந்தியா மேற்கொண்ட உதவி, மீட்புப் பணிகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இவ்வளவு இருந்தும் மக்களிடையே அதிருப்தி ஏன்?

நீண்டகால பொருளாதார தேக்க நிலையிலிருந்து மீளும்போது வேலை வாய்ப்புகள் ஏற்படச் சிறிது காலம் ஆகும். நுகர்வோரிடம் வாங்கும் சக்தி அதிகரிக்கவில்லை. நிறுவனங்களின் உற்பத்தி, லாப அளவுகள் போதவில்லை. எனவே நிறுவனங்கள் விரிவாகவும் வாய்ப்பு இல்லை. பருவம் தவறி பெய்த மழையால் விவசாயிகளுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வேளாண் அமைச்சர் அத்துறைக்குப் பொருத்தமானவர் அல்ல. கட்டுமானத் தொழிலில் வளர்ச்சி மெதுவாக இருக்கிறது. அடித்தளக் கட்டுமானத் தொழில்துறை வங்கிகளுக்குத் திருப்பித் தர வேண்டிய கடன்சுமை அதிகம்.

தூய்மை இந்தியா திட்டத்துக்கு மாநில அரசுகளிடமிருந்தும் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் ஒத்துழைப்பு இல்லை. நிதித்துறையின் வரி விதிப்புப் பிரிவும் மெத்தனமாகவே செயல்படுகிறது. அந்நிய நேரடி முதலீட்டு நிறுவனங்கள் முந்தைய நிதி ஆண்டுகளுக்கான வரியைச் செலுத்த வேண்டும் என்ற கட்டாயம் காரணமாக முதலீடுகள் திரும்பப் பெறப்படுகின்றன.

குஜராத்தில் துடிப்பாகச் செயல்பட்டதைப்போல மத்திய அரசில் செயல்படவில்லை என்று தொழிலதிபர்கள் அவர் மீது அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். சந்தை சீர்திருத்தங்களில் அவர் தீவிரமாக இல்லை என்று வலதுசாரி சிந்தனையாளர்கள் கோபப்படுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களையும் அரவணைத்துச் செல்லப் பார்க்கிறார் என்பதால் சங்கப் பரிவாரங்களும் கோபத்தில் கொதிக்கின்றன. வங்கிக் கணக்கு மூலமே காப்பீட்டு திட்டங்கள், ஓய்வூதிய திட்டத்தைக் கொண்டுவந்து ஏழைகளுக்கு வேண்டியவராகிவிடுவாரோ என்று இடதுசாரிகளும் சந்தேகப்படுகின்றனர்.

நரேந்திர மோடியின் கண்கள் அடுத்த 2019 மக்களவை பொதுத் தேர்தலை நோக்கி இருக்கிறது. அதற்குள் மக்களுக்குத் தேவைப்படும் எல்லாவற்றையும் செய்துமுடித்துவிட விரும்புகிறார். வலதுசாரியாகவோ இடதுசாரியாகவோ இருந்தால் முடியாது என்பதால் மத்தியவாதியாக இருக்க முடிவு செய்திருக்கிறார். மக்களுடைய அதிருப்தியெல்லாம் காலவெள்ளத்தில் மறைந்துவிடும் என்பது அவருக்குத் தெரியும். மோடியின் ஆதரவாளர்களே அதிருப்தியில் இருந்தாலும் 2019-ல் தன்னுடைய ஆட்சியின் பலன்களை அவர் அறுவடை செய்வார்.

வெற்றி மொழி

அரிஸ்டாட்டில்



அரிஸ்டாட்டில் ஒரு கிரேக்க தத்துவஞானி. கவிதை, நாடகம், இசை, அரசியல் மற்றும் அறிவியல் போன்றவற்றை தனது எழுத்துகளில் பிரதிபலித்த ஒரு வல்லுனராக விளங்கினார். மேற்கத்திய தத்துவங்கள் தோன்றுவதற்கு இவரே முக்கிய காரணமானவராக கருதப்படுகிறார். இவரின் இயற்பியல் கோட்பாடுகள், பிற்காலத்திய வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்தன.

நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் தமிழ் உட்பட உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மாவீரன் அலெக்சாண்டருக்கு நண்பராகவும், ஆசிரியராகவும் விளங்கினார். உலகின் மிகச்சிறந்த தத்துவஞானிகளில் தலைசிறந்தவர் அரிஸ்டாட்டில்.

1. தைரியம் இல்லாமல் உங்களால் இந்த உலகில் எதுவும் செய்ய முடியாது. மரியாதைக்கு அடுத்து மனதின் சிறந்த பண்பு இதுவே.
2. கலையின் நோக்கம் வெளிப்புற விஷயங்களை பிரதிபலிப்பதல்ல, உள்ளத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவது.
3. தனித்திறன் என்பது செயல் அல்ல, அது ஒரு பழக்கம்.
4. கல்வியின் வேர்கள் மிகவும் கடினமானது, ஆனால் அதன் பழம் இனிமையாது.
5. ஒரு செயலின் நல்ல தொடக்கம் அதனை பாதியளவு முடித்துவிட்டதற்கு சமம்.
6. இரண்டு உடல்கள் வசிக்கும் ஒரு ஆன்மாவிற்காக உருவானதே அன்பு.
7. எந்த ஒரு பரிந்துரை கடிதத்தையும் விட சிறந்தது தனிப்பட்ட அழகே.
8. பைத்தியக்காரத்தனத்தின் கலவை இல்லாத ஒரு சிறந்த மேதை எவருமில்லை
9. மனதின் ஆற்றலே வாழ்க்கையின் சாராம்சம்.
10. சமமற்ற விஷயங்களை சமப்படுத்த முயற்சிப்பதே சமத்துவமின்மையின் மோசமான வடிவம்.
11. மகிழ்ச்சியானது நம்மைப் பொருத்தே அமைகின்றது.
12. செயல்பாட்டில் ஏற்படும் மகிழ்ச்சியானது, அந்த செயலை முழுமைபெற வைக்கின்றது.
13. அனைவருக்கும் நண்பராக இருப்பது என்பது உண்மையில் ஒருவருக்கும் நண்பராக இல்லாததை போன்றது.

வேலைவாய்ப்பை உருவாக்குவதே மகிழ்ச்சி

நீரை மகேந்திரன்
maheswaran.p@thehindutamil.co.in

“ஏதாவது ஒரு நிறுவனத்தில் வேலை செய்து சம்பாதிக்கலாம். சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் ஜாப் கிரியேட்டராக இருந்தால் அதுதான் பயனுள்ள வாழ்க்கை. உன்னால் இரண்டு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். அதில் சந்தோஷப்படு” என்று அப்பா சொல்வார்.

▲ எஸ்.குமார், பிரபஞ்சா பெட் பாட்டில்ஸ், கடலூர்.

கடலூரைச் சேர்ந்தவர் எஸ். குமார். பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் நல்ல பொறுப்பான வேலையில் இருந்தவர். ஆனால் அந்த வேலையில் தொடர்ந்து நீடிக்க மனமில்லாமல் தனியாக தொழிலில் இறங்கியவர்.

குடிநீர் மற்றும் குளிர்பானங்களை அடைக்கும் பெட் பாட்டில் உற்பத்திதான் இவர் தேர்ந்தெடுத்த தொழில். தனது சேமிப்பு, மனைவியின் நகைகள்தான் ஆரம்ப முயற்சிக்கு உதவியாக இருந்தது.

தொழிலில் இறங்குவதற்கு முன்பே அந்த தொழில் குறித்து தெளிவாக திட்டமிட்டிருந்ததால் தோல்வி அடைவேன் என்கிற பயமே இல்லை என்றார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக அளவில் எம்எஸ்சி கெமிஸ்ட்ரியில் கோல்டு மெடல் வாங்கியர். இவரது தொழில் அனுபவம் இந்த வார பகுதியில் இடம் பெறுகிறது.

ஒரு பெரிய நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த காலத்திலேயே, அவ்வப்போது சிலருக்கு தொழில் ஆலோசனைகள் கொடுப்பேன். அப்படிதான் பேக்கேஜிங் மினரல் வாட்டர் நிறுவனங்கள் சிலவற்றுக்கு ஆலோசகராக இருந்தேன்.

அந்த காலகட்டங்களில் மினரல் வாட்டர் உற்பத்தி துறையின் தேவைகள் என்ன என்பதை அறிந்தேன். குடிநீர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு குடிநீரை அடைக்கும் பாட்டிலுக்குத் தட்டுப்பாடு இருப்பதைத் தெரிந்து கொண்டேன்.

இதனால் இந்த தொழில் குறித்து மேலும் தெரிந்து கொண்டு இயந்திரங்களை வாங்கினேன். நவீன இயந்திரங்கள் பயன் படுத்தும்போது தொழிலை விரைவாகவும், நவீனமாகவும் மேற்கொள்ள முடியும் என்கிற யோசனை இருந்தது. எனவே ஆரம்பத்திலேயே நவீன இயந்திரம் மற்றும் தரமான மூலப்பொருள் பயன்படுத்துவது என்பதில் தெளிவாக இருந்தேன்.

சந்தையில் தேவை அதிகமாக இருப்பதால் முதல் யூனிட்டுக்கு பிறகு அடுத்தடுத்த சில இடங்களில் சிறு சிறு யூனிட்டுகளாக தொடங்கினேன். ஒவ்வொரு ஊரிலும் அந்தந்த பகுதிகளில் உள்ளவர்களுக்கு வேலை கொடுத்தேன். தற்போது ஐந்து இடங்களில் உற்பத்தி யூனிட்டுகள் உள்ளன. மேலும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் சில ஊர்களில் சிட்கோ தொழிற்பேட்டை பகுதியில் இடம் கிடைத்துள்ளது. எனவே அடுத்த கட்டமாக தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியிலும் உள்ளேன்.

தற்போது நானும் எனது மனைவியுமே தொழிலை கவனித்து வருகிறோம். ஐம்பது பணியாளர்கள் வரை பணியாற்றி வருகின்றனர். சென்னை மற்றும் பாண்டிச்சேரி என ஒரு சில இடங்களில் மட்டுமே உற்பத்தியாளர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று பல உற்பத்தியாளர்கள் பெருகியுள்ளனர். போட்டி அதிகரித்துள்ளது. சந்தையை தக்கவைத்துக் கொள்ள வேண்டுமெனில் தரம் மற்றும் புதிய முயற்சிகளில் இறங்க வேண்டும் என்பது என் அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டது.

உன்னால் முடியும்
தவிர்த்து ஜெயித்த சாதனையாளர்கள்

இந்த போட்டிக்கு ஏற்ப நாங்கள் தயாராகிக் கொண்டோம். வாடிக்கையாளர்கள் தேர்ந் தெடுக்கும் வகையில் பல டிசைன்கள் கொடுக்கிறோம். டிசைன்களுக்காக உழைக் கிறோம்.

மேலும் எங்களது ஊழியர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் கொடுக்கிறோம். அவ்வப்போது நடக்கும் பயிற்சி முகாம்களுக்கு அனுப்புகிறோம். உடன் நாங்களும் கற்றுக் கொண்டே வருகிறோம். தொழில்முனைவோராக வளர புதிய புதிய விஷயங்களை கற்று கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து இருக்கிறேன்.

எங்களது ஒவ்வொரு தயாரிப்பு யூனிட்டுகளையும் இணைப்பதுபோல சிஸ்டமேட்டிக்காக செயல்படுகிறோம். நேரடி உற்பத்தி தவிர ஒப்பந்த அடிப்படையில் உற்பத்தி செய்து கொடுக்கும் இரண்டு நிறுவனங்களும் உள்ளது. 2020 ம் ஆண்டில் 20 இடங்களில் உற்பத்தி மையங்கள் அமைக்க வேண்டும் என்பதை இலக்காக வைத்துள்ளேன். அதாவது 20:20 என்பதுதான் இலக்கு.

அடிப்படையில் எங்கள் குடும்பம் விவசாய பின்புலத்தைக் கொண்டது. அப்பா ஆசிரியராக பணியாற்றினார். அவர் சொல்லி வளர்ந்த விதம்தான் என்னை இந்த அளவுக்கு வளர்த்திருக்கிறது. “ஏதாவது ஒரு நிறுவனத்தில் வேலை செய்து சம்பாதிக்கலாம். சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் ஜாப் கிரியேட்டராக இருந்தால் அதுதான் பயனுள்ள வாழ்க்கை” என்பார். உன்னால் இரண்டு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். அதில் சந்தோஷப்படு என்பார்.

கோடைக்காலத்தில் விவசாய வேலை இருக்காது. ஆனால் மராமத்து வேலை களுக்கு ஆள் அமர்த்துவார். கேட்டால் விவசாய வேலையிலும் கோடைகாலத்தில் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பார். அந்த உத்வேகம்தான் என்னை 20:20 இலக்கை நோக்கி ஓடவைத்துக் கொண்டிருக்கிறது என்று மகிழ்ச்சி பொங்க கூறுகிறார் இந்த கோல்டு மெடல் பட்டதாரி.

குறள் இனிது

நல்லவர் தான், ஆனால்...

சோம.வீரப்பன்
somaiah.veerappan@gmail.com

எனதுகல்லூரிநண்பர்ஒருவர்வங்கியில் அதிகாரியாகச் சேர்ந்திருந்தார். தினமும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு விட்டுத்தான் வங்கிக்குச் செல்வார். மீண்டும் மாலையில் வேறு ஒரு கோவில்! நாணயமானவர், அதிலும் மிகவும் கண்டிப்பானவர். வேலை நிமித்தமாக யாருடைய கடைக்கும் செல்லநேர்ந்தால் அவர்கள் கொடுக்கும் தேநீரைக்கூட அருந்தமாட்டேன் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வார். வாடிக்கையாளர்கள் உணவு விடுதிக்கு அழைத்தாலும் மறுத்துவிடுவார். இதிலெல்லாம் கவனமாக நடந்து கொண்டு விட்டால் பின்னர் பிரச்சினை வராது என்பார். இந்தக் கலிகாலத்தில் இப்படியும் ஒரு மனிதரா என்று வியப்பேன்; மகிழ்வேன்!

சுமார் ஏழு வருடங்கள் கழித்து அவர் பதவி உயர்வு பெற்று எனது ஊருக்கு மாற்றலாகி வந்ததை அறிந்து அவரைப் பார்க்கச் சென்றேன். வெகுவாக வரவேற்று உபசரித்தார்.

அவரது அலுவலகத் தொலைபேசியின் பேசும் கருவி சரியாக வைக்கப்படாமல் இருந்தது. கோணலாக வைத்து இருந்ததால், எதிர்முனையில் இருப்பவர்கள் அதில் வேறு யாரோ பேசிக் கொண்டிருப்பதாகத் தவறாக ஊகிப்பார்கள் என்பதால் அதை சரிசெய்து வைத்தேன். உடனே மணி அடித்து. ஆனால் அதை அவர் எடுக்கவே இல்லை. பலமுறை அடித்தது நின்று விட்டது. நாங்கள் பேச்சைத் தொடர்ந்தோம் என்பதை விட, அவர் தனது உயரிய குணங்களைப் பற்றி விவரித்ததை எல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன் என்றே சொல்ல வேண்டும்!

அடுத்தடுத்து வந்த தொலைபேசி அழைப்புகளுக்கும் அவர் அலட்டிக்கொள்ளவில்லை. ஏன் என்று கேட்டதற்கு ‘அட விடுப்பா, எவனாவது தலைமையகத்திலிருந்து எதையாவது கேட்டுத் தொந்தரவு செய்வான்’ என்றார். எனக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. ‘யாராவது வாடிக்கையாளரின் அழைப்பாகக் கூட இருக்கலாமே’ என்றேன். அதற்கு அவர், ‘அதுதான் கீழே இத்தனைபேர் வேலை செய்கிறார்களே. அவர்களது தொலைபேசியில் தொடர்பு கொள்ளட்டுமே’ என்றார்.

அலுவலக நேரமாயிற்றே நான் கிளம்புகிறேன் என்று சொன்னாலும் கேட்கவில்லை. பொது வாழ்வில் யாருக்கும் நேர்மையில்லை என்றும், வங்கியில் கடன் வாங்குபவர்களுக்கு முதல்நாள் முதலே திருப்பிக் கட்டும் எண்ணம் இல்லை என்றும் அங்கலாய்த்தார். சம்பளம் கொடுக்கும் வங்கியின் வாடிக்கையாளர்களைக் காக்க வைத்துவிட்டு அவர் என்னிடம் பேசுவதை மேலும் பொறுக்க முடியாததால், நாசுக்காகக் கிளம்பி விட்டேன்.

பின்னர் அவரது அலுவலக ஊழியர்கள் கூறியது வேதனையானது. அவர் யாருக்கும் கடனே கொடுப்பது இல்லையாம். “எல்லோரும் அயோக்கியப் பயல்கள், பணத்தை வாங்கிக் கொண்டு ஓடிப்போய் விடுவான்கள்” என்பாராம்.

இப்படிப்பட்ட மனிதர்களை நீங்களும் சந்தித்து இருப்பீர்கள். தாம் உயர்ந்தவர் ஒழுக்கமானவர் என்று பெருமை பேசும் இவர்கள் தம் அடிப்படைக் கடமையிலேயே தவறிவிடும்பொழுது எப்படி நல்லவர்கள் ஆவார்கள்? ஒருவன் செய்யக் கூடாததைச் செய்தால் தவறு; அதைப் போலவே ஒருவன் செய்யவேண்டியதைச் செய்யா விட்டாலும் தவறே என்கிறது குறள்!

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.